**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-12 | Taluk | : | |
| Name | : | **சரவணபவா** | Occupation | : | |
| Father Name | : | **மருதமுத்து** | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 08.07.2025**

**Accused present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் பட்டுகுடி முக்கிய சாலையில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் இறந்துபோன பிச்சை யன் விவசாய வேலை செய்தவர் அவரை தெரியும். அவர் மகன் சந்திரசேகரனை தெரியும். போலிஸார் என்னை விசாரிககவில்லை. என்னிடம் காண்பிக்கபடும் அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கபிஸ்தலம் காவல்நிலையம் போய் உள்ளேனா என்றால் போகவில்லை. கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடைதல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 26.04.22 அன்று போலிஸார் மாலை 3 1/2 மணிக்கு கபிஸ்தலத்தில் வைத்து 1ஆம் எதிரி ரமேஷ் போலிஸ் காவலில் எடுத்து விசாரித்தபோது நான் வாக்குமூலம் பதிவு செய்ய சாட்சியாக இருந்துவிட்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைபற்றுதல் மகசரிலும் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு தற்போது ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைபற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்தை எதிரிக்கு பயந்து கொண்டு மறுக்கிறேன் என்றால் சரியல்ல. போலிஸார் விசாரிக்கவில்லை உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.